OS. 139/2024

நாள். 21.04.2026

பி.வா.சா. 1 – ஜெயராமன்

7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனார் செல்லச்சாமியால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து நானும், வாதி, இதர பிரதிவாதிகள் 20.06.1997 ம் தேதி பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். சர்வே எண்.25/2 மொத்த விஸ்தீரணம் 13 ஏக்கர் 8 சென்டு என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்து நானும், என்னுடைய சகோதரர்களும் தலா 3 ஏக்கர் 18 சென்டு என்று பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். சர்வே எண்.25/2 ஆனது சர்வே எண்கள்.25/2 ஏ, 25/2 பி, 25/2 சி, 25/2 டி ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் பாகம் பிரித்துக்கொண்ட சொத்துக்கள் அனைத்திற்கும் அவரவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 ம் பிரதிவாதிகளான நாங்கள் எங்களுக்கு பாகம் கிடைத்த சொத்துக்களை நாங்கள் பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நானும், எனது பிள்ளைகளான அர்ச்சனா, கிஷோர், முகிலன் ஆகியோரும் கடந்த 14.02.2005 ம் தேதியில் சர்வே எண்.25/2 டி–ல் கண்ட சொத்தை கிரையம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி துரைராஜ் சர்வே எண்.25/2 சி–ல் கண்ட 5 சென்டு இடம் மற்றும் வீட்டை 18.03.2009 தேதியில் இனாம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன எங்களது சகோதரர் நடராஜன் என்பவரும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதி சரஸ்வதி 3 ம் பிரதிவாதி நாகரெத்தினம் என்பவருக்கு 06.05.2021 ம் தேதி சர்வே எண.25/2 சி–ல் கண்ட வீடு மற்றும் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அது எனக்கு பின்னால்தான் தெரியும். 3 ம் பிரதிவாதி

நாகரெத்தினம் அவருக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்.25/2 பி–ல் கண்ட சொத்தை அடமானம் வைத்து கடன்வாங்கியுள்ளார் என்ற விவரம் எங்களுக்கு நோட்டிஸ் வந்த பிறகுதான் தெரியும். 3ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக வாதிதான் பிணையதாரராக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் 7ம் பிரதிவாதி நிறுவனத்தில் சென்று கேட்டேனா என்றால் கேட்டேன். வாதிக்கு சொந்தமாக சர்வே எண்.162/1 ஏ 1 ஏ, சர்வே எண்.162/4 ஏ–ல் கண்ட சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.31/5 –ல் கண்ட 5 சென்டு நிலத்தை வாதி இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1997ம் ஆண்டு பாகம் பிரித்த காலத்திலிருந்து அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர் தான் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக கடனை கட்டாமல் தப்பிப்பதற்காக வாதியை கூட்டு சேர்த்துக்கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி முறையான ஆவணங்களை பரிசீலித்து 3ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளதால் வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.